மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) ஒளிப்பதிவு சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (VCRS) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவு சிறுபேழைப் பதிவு கருவிகள் (VCRS) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (VCRS) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.